CASE NO. CC 85/2024

Date 26.06.2025

பெயர் PW 1 – நாகேந்திரன் த/பெ முருகேசன்

**(எதிரி ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எதிரி எனது மனைவியின் பெரியம்மா மகள் என்றால் சரிதான். நான் சிவகங்கை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எப்போது வேலைப் பார்த்தேன் என்றால் கடந்த 2020 ம் ஆண்டு முதல் 2025 ம் ஆண்டு வரை வேலைப் பார்த்து வந்தேன். தற்போது 5 மாதங்களாக சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் வேலைப் பார்த்து வருகின்றேன். எனது மைத்துனர் கற்பகமூர்த்தி ஆட்டோ ஓட்டி வருகிறார் என்றால் சரிதான்.

2) நான் எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தை எனது மனைவி மற்றும் மைத்துனருக்கு தெரிவித்தேனா என்றால் எனது மனைவிக்கு மட்டும் தான் தெரிவித்தேன் மைத்துனரிடம் தெரிவிக்கவில்லை. கடன் கொடுக்கும் விவரம் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் எனது மனைவிக்கு தெரியும் அவர் முன்னிலையில் தான் கொடுத்தேன். எதிரியின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3) எதிரியின் ஒரே மகளும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எதிரி வாடகை வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சொந்த வீட்டில் இருப்பதாக என்னிடம் சொன்னார். நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் செய்கிறேன். எனது வருமான வரி கணக்கில் எதிரிக்கு 06.08.2023 ம் தேதி ரூபாய் 13லட்சம் பணம் கடன் கொடுத்த விவரத்தைக் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி ஒரு அரசு ஊழியர் என்றால் சரிதான். அவரது வருமான வரி கணக்கிலும் எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தை கூறவில்ல என்றால் சரிதான்.

Web copy

4) எனது புகார் மனு, நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றி எதிரிக்கு எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்த ரூபாய் 13 லட்சம் எனக்கு எப்படி வந்தது என்ற விவரம் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுத்த ரூபாய் 13 லட்சம் விவரம் எனக்கும் என் மனைவியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான்.

5) எதிரிக்கு ரூபாய் 13 லட்சம் கடனாகக் கொடுத்த சங்கதியை நிரூபிப்பதற்கு எனது மனைவியை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாரா உள்ளேன். எனது மைத்துனர் கற்பகமூர்த்தி எதிரிக்கு 06.08.2023 ம் தேதி ரூபாய் 16 லட்சம் கடன் கொடுத்த விவரத்தை என்னிடம் தெரிவித்தாரா என்றால் எனக்குத் தெரியாது. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது செக்யூரிட்டிக்காக ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

6) கூடுதல் ஆவணங்கள் எதுவும் வாங்காமல் பெரிய தொகையை கடனாகக் கொடுக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் ரூபாய் 13 லட்சத்திற்கு வட்டி எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் தனது கையெழுத்தை மறுக்கும்போது அந்த கையெழுத்து கைரேகை நிபுணருக்கு அனுப்பி ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள நாகேந்திரன் என்கிற எழுத்தும் தொகை நிரப்பப்பட்ட எழுத்தும் மற்றும் கையெழுத்து ஆகியவைகள் வேறு வேறு மையினாலும் வெவ்வேறு நபர்களாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) காசோலை என் முன்பாக பூர்த்தி செய்யவில்லை என்றால் எதிரி பூர்த்தி செய்து தான் கொண்டு வந்தார். ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் கடன் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் வங்கியின் மூலம் தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல் 06.08.2023 ம் தேதியன்று எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் அந்த விவரத்தை எனது வருமான வரி கணக்கில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல.

8) 06.08.2023 ம் தேதியில் எனக்கு ரூபாய் 13 லட்சம் கொடுப்பதற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல நான் கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வைத்திருந்த

webcopy

தொகையை சேர்த்துக் கொடுத்தேன் மேலும் சொசைட்டியிலிருந்து பணம் எடுத்துக்கொடுத்தேன். ரூபாய் 13 லட்சத்தை வட்டியில்லாமலும் கூடுதல் ஆவணங்கள் இல்லாமலும் கொடுக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. சொசைட்டியிலிருந்து வாங்கி கடனுக்கு எவ்வளவு வட்டி என்றால் எனக்குத் தெரியாது. எதற்காக சொசைட்டியிலிருந்து கடன் வாங்கினேன் என்றால் நிலம் வாங்குவதற்காக வாங்கினேன்.

9) நான் இடம் வாங்குவதற்காக சொசைட்டியில் வட்டிக்கு கடன் வாங்கிவிட்டு அந்தத் தொகையை வட்டியில்லாமல் எதிரிக்கு கடனாகக் கொடுத்தேன் என்பது பொய் என்றால் சரியல்ல. எதிரி 06.08.2023 ம் தேதிக்கு முன்பு பணம் கொடுக்கல் வாங்கல் செய்திருந்தாரா என்றால் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது. 06.08.2023 தேதிக்கு முன்பு எவ்வளவு தொகை கடன் வாங்கினார் என்றால் தேதி எனக்குத் தெரியாது ஆனால், 10 ஆயிரம், 15 ஆயிரம் தொகையாக எதிரி என்னிடம் வாங்கினார்.

10) வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த பிறகு எதிரி என் மீதும் எனது மைத்துனர் கற்பகமூர்த்தி என்பவர் மீதும் வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தியதாக காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், சிவகங்கை அவர்களிடம் புகார் மனு கொடுத்து அந்த புகார் மனு விசாரணைக்காக குன்றக்குடி காவல் நிலையத்தில் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். கடந்த 2022 ம் ஆண்டிற்கு முன்பாக எதிரி என்னிடம் வாங்கிய ரூபாய் 3 லட்சம் கடனுக்காக ரூபாய் 6 லட்சத்தி 80 ஆயிரம் தொகையை வட்டியாகவும் அசலாகவும் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது.

11) கடந்த 2022 ம் ஆண்டிற்கு முன்பாக வாங்கி ரூபாய் 3 லட்சம் தொகைக்கு செக்யூரிட்டிக்காக பூர்த்தி செய்யாமல் கொடுக்கப்பட்ட வழக்கு காசோலை மற்றும் காசோலை எண்.000006 ஆகியவற்றை நான் தவறாகப் பயன்படுத்தினேன் என்றும் காசோலை எண்.000006 யை வைத்து எனது மைத்துனர் கற்பகமூர்த்தியை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. கடந்த 06.08.2023 ம் தேதியன்று நான் ரூபாய் 13 லட்சமும் எனது மைத்துனர் கற்பகமூர்த்தி ரூபாய் 16 லட்சமும் கடன் கொடுப்பதற்கு எங்களுக்கு வசதி இல்லை என்றும் ரூபாய் 29

WebCopy

லட்சத்தை கடனாக பெறுவதற்கு இந்த எதிரிக்கு தகுதி இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

12) வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தியது சம்பந்தமாக எதிரி என் மீதும் என் மைத்துனர் மீதும் காவல் துறையில் கொடுத்த புகாரை எனது சொல்வாகக்கைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்காமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலைக்கு எந்த மறுபயன் இல்லை என்றால் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. காவல் துறையில் புகார்கொடுத்து நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் சிவகங்கை SBI வங்கியில் மெயின் கிளையில் கணக்கு வைத்துள்ளேன். வங்கிக் கணக்கு சம்பந்தமான விவரங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் உள்ளேன்.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஓம்)திரு.P.செல்வம், 26.06.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web Copy